கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி எங்காவது கொடுக்கப்பட வில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுத்து, கோவை மாவட்டத்திலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 470, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

470—

கனிமக் சுரங்கத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்.

*4072 திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கனிமக்கற்களை வெட்டியெடுக்கும் சுரங்கங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியே கூலி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுரங்கத் தொழிலானது மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதால், தமிழக அரசால் ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்யப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிம கற்களை வெட்டி எடுக்கும் சுரங்கத்தில் கடந்த தி. மு. க. அரசின் கொள்கை தவறாக இருந்ததால் தமிழகத்திலுள்ள நிறைய சுரங்கங்களில் வேலை நின்றுவிட்டது. அதில் வேலை செய்த தொழிலாளர்கள் அண்டை மாநிலங்களுக்கு சென்று பிழைக்க நேரிட்டது. ஆகவே இதை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, அவர்களுக்கு தகுந்த கூலி கிடைக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள சுரங்கத் தொழிலானது மத்திய அரசினுடைய அதிகாரத்திற்

1992 ஏப்ரல் 3]

குட்பட்டதால் இவ்வரசால் அத்தொழிலுக்கு அதிய விகித நிர்ணயம் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய ஆலோசனையை ஏற்று, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமக் கற்களை வெட்டி எடுக்கின்ற ஆண்கள், பெண்கள் கூலி வேலை செய்கின்றவர்களுக்கு அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதனால் அவர்கள் கைகால்களை எல்லாம் இழந்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்குத் தக்க பாதுகாப்பை, அவர்களுடைய எதிர்காலத்தைக் கருதி, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய ஒரு சட்டத்தை, இதில் சேர்க்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம் காக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு, தொழிலாளர்களுடைய நலனைப் பேணி, பாதுகாத்து வருகிறது. அந்த வகையில் குவாரிகளிலே மற்றும் மலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய உடல்நலம் பாதிக்காதவாறு அவர்களுக்கு இயன்றவரையில் பாதுகாப்பு அளிக்கும். அதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவாரிகளிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள் மிகவும் ஆபத்தான நிலைமையில் வேலை செய்துக் கொண்டு வருகிறார்கள். அதுவுமின்றி அவர்களுக்கு மருத்துவ வசதியும் அங்கே கொடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும்போது மருத்துவ வசதியும் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்பதையும் சேர்த்து பரிந்துரை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆபத்தான வேலை என்று தெரிந்துதான் இதிலே தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். இன்றைக்கு தொழிலாளர்களுக்கு ஆங்காங்கே ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் இருக்கின்றன. அதன்மூலம் உரிய வகையிலே தொழிலாளர்கள் மருத்துவ வசதி, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே என்னென்ன கனிமச் சுரங்கங்கள் இருக்கின்றன. அதிலே பணியாற்றக் கூடிய ஆண், பெண் தொழிலாளர்கள் எண்ணிக்கை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 471, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

471—

திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டிடம்

*4306 திரு. வெ. பழனிசாமி:
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோயமுத்தூர் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS